**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 5, Issue - 2, May 2026** **E-ISSN: 2583-0481**
**MLA, DOAJ Indexed**

# Antiquity and lmportance of Tamirabarani in Tamil Literature

**Dr. R. Vishnupriya,** Assistant Professor In.Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Coimbatore District, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-6929-8162**
**DOI: 10.5281/zenodo.20474152**
**Received:** 28 December 2025; **Revised:** 22 February 2026; **Accepted:** 13 March 2026; **Available Online:** 31 May 2026

## Abstract

*Water is the basis for the happy life and rejuvenation of man in this world. This world cannot live without water. In this way, sea water, river water, and waterfall water all mix in man's life and acquire different values. River water is very useful for man to maintain his health. It is said that the culture and civilization of the people developed on the banks of rivers.Tirunelveli district is the lifeblood of the South, a place that showcases the culture and civilization of the Tamil literature. All the rivers flowing in this district originate in the Western Ghats and flow into the Bay of Bengal. The only river that has the distinction of originating in Tamil Nadu and flowing into the sea in Tamil Nadu is the Thamirabarani. Tirunelveli district is the lifeblood of the South, a place that celebrates the culture and civilization of the Tamil literature. All the rivers flowing in this district originate in the Western Ghats and merge into the Bay of Bengal. The only river that has the distinction of originating in Tamil Nadu and merging into the sea in Tamil Nadu is the Thamirabarani. In Tamil literature, such a Thamirabarani river is called the Porunai River. Hence, this article aims to study the antiquity and speciality of this river.*

**Keywords:** Tamil Literature, Tamirabarani, Antiquity, Rivers, Dams.

## References

[1] Arulraj, Na., Etd. *Thamizhaga Varalarrum Thamizhar Panpaadum*. Paavai Printers, 2010.
[2] Ilangkumaran, Iraa., Etd. *Madhurai Meenatchiyammai Kuram*. Thirunelveli Thennindhiya Saiva Siddhantha Noorpathippukkazhagam, 1977.
[3] Ilangomani, Sa. "Thirunelveliyin Thotramum Adhan Parimaanamum." *Keetru*, November 2021.
[4] Raasamanickanar, Maa. *Thamizhaga Varalarrum Panpaadum*. Sharadha Pathippagam, 2011.
[5] Radhakrishnan, Ke. Es. *Nimira Vaikkum Nellai, Podhigai, Porunai*. Parisal Arakkattalai, 2005.
[6] Ramasubramaniyam, Va. Tha., Etd. *Kambaramayanam*. Thirumagal Nilaiyam, 2005.
[7] Eswaran, Paa. "Kavignar Vairamuthu Neer Kavithaiyil Suttruzhul Sindhanaigal." *Kalanjiyam Sarvadesa Tamil Aayvidhal*, Idhal 4, February 2026.
[8] Karthikeyan, Maa. "Suzhaliyal Nokkil Sangath Thamizarin Neer Melanmai." *Arima Nokku*, January 2025.
[9] Sethupillai, Raa. Pi. *Thamizhagam Oorum Perum*. Palaniyappa Brothers, 1946.
[10] Thuraisamippillai, Tha. *Amudha Thamil Thantha Ouvaiyar*. Uma Pathippagam, 2003.
[11] Bakthavachalam Venugopal, thoku. *Bharathiyar Kavithaigal*. Leo Book Publishers, 2004.
[12] Balasubramaniyan, Ku. Ve., Etd. *Purananooru*. New Century Book House, 2004.

[13] Puliyurkesigan, thoku. *Mukkoodarpallu*. Paari Nilaiyam, 1960.
[14] Periyasami, Ko. "Suzhaliyal Nokkil Purananooru." *Puthuppunal*, Malar 14, Idhal 6, June 2023.
[15] Muruganantham, Na. "Thamizhnadu Netru - Indru - Naalai." *Tamizhthurai*, Pondicherry Palkalaikazhagam, 1997.
[16] Rajappan, thoku. *Tamizh Naattu Varalaru*. Ethir Veliyeedu, 2015.
[17] Regina. "Ettuthogai Noorkalil Neer Kurittha Suttruzhul Vizhippunarvo." *Sarvadesa Thamil Aayvidhal*, Thogudhi 2, Idhal 1, 2020.
[18] Varadharasanar, Mu., thoku. *Thirukkural*. Thennindhiya Saiva Siddhantha Noorpathippukkazhagam, 1959.
[19] Vengadasami, Mayilai Seeni., pathippaasiriyar. *Manonmaneeyam*. Gowra Pathippagam, 2009.
[20] Jayaseelan Ko. "Valluvar Kanda Ulagam." *Arima Nokku*, July 2019, Raja Pathippagam.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

# தமிழ் இலக்கியங்களில் தாமிரபரணியின் தொன்மையும் சிறப்பும்

**முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, கோவை மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-6929-8162**
**DOI:**

**ஆய்வுச்சுருக்கம்**

*உலக வாழ்வில் மனிதனின் மகிழ்ச்சியான வாழ்விற்கும், புத்துணர்ச்சிக்கும் நீர் அடிப்படையாக அமைகின்றது. இவ்வுலகமும், நீர் இன்றி வாழ இயலாது. அவ்வகையில் கடல்நீரும், ஆற்றுநீரும், அருவி நீரும் மனிதனின் வாழ்வில் கலந்து வெவ்வேறு சூழ்நிலைகளில் மதிப்பைப் பெறுகின்றன. மனிதன் உடல்நலம் பேண ஆற்றுநீர் பயன்படுகின்றது. ஆற்றங்கரையிலேயே மக்களின் பண்பாடும், நாகரிகமும் வளர்ந்தன என்று கூறுவர். தமிழர்களின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் பறைசாற்றும் இடங்களில் தென்னாட்டின் உயிர்நாடியாக விளங்குவது திருநெல்வேலி மாவட்டமே ஆகும். அம்மாவட்டத்தில் பாயும் ஆறுகள் அனைத்தும் மேற்கு தொடர்ச்சி மலையில் உருவாகி வங்கக்கடலில் கலக்கின்றன. தமிழ்நாட்டிலேயே உருவாகி, தமிழ்நாட்டிலேயே கடலில் கலக்கின்ற பெருமை பெற்ற ஒரே நதி தாமிரபரணியே ஆகும். தமிழ் இலக்கியங்களில் அத்தகைய தாமிரபரணி ஆறு, பொருநை நதி என்றே அழைக்கப்படுகின்றது. இவ்வாற்றின் தொன்மையினையும், சிறப்பினையும் ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**குறிப்புச்சொற்கள்**: தமிழ் இலக்கியங்கள், தாமிரபரணி, தொன்மை, ஆறுகள், அணைகள்.

**முன்னுரை**

மனித நாகரிகத்தின் முதல் பிறப்பிடமாக ஆறு அமைகின்றது. ஆறு ஓடிய வழிகள் மூலமே மனிதன் பல இடங்களுக்குக் குடி பெயர்ந்தான். ஆறு என்றால் ‘வழி’ என்று பொருள். தண்ணீர் செல்லும் வழி என்பதால் ஆறு எனப் பெயர் வந்ததாகக் கூறுவர். பத்துப்பாட்டில் அமைந்துள்ள ஆற்றுப்படை இலக்கியம் வழிப்படுத்துவதாகவே அமைகின்றன. ஆறு என்பது இயற்கையாகச் செல்லும் நன்னீரைக் கொண்ட ஒரு பெரிய நீரோட்டம் ஆகும். தாவரங்கள் அற்ற நிலையில் கூட ஆக்சிஜன் மிகுந்து காணப்படுகின்றது. மலைகளில் தொடங்கி ஏதாவது ஆற்றிலோ, ஏரியிலோ, கடலிலோ இணைகின்றன. ஆற்றின் நீரோட்டம் புவி ஈர்ப்புவிசையின் காரணமாக ஏற்படுகின்றது. சில ஆறுகள் இன்னொரு நீர் நிலையை அடையும் முன்பே நிலத்துக்குள் உறிஞ்சப்படுவதோ அல்லது வறண்டு விடுவதோ உண்டு. ஆனால் என்றும் வற்றாது செல்லும் ஒரு நதியாக தாமிரபரணி விளங்குகின்றது. அந்நதியின் பெருமையினையும், தனித்துவத்தையும் ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**தென்பாண்டி நாடு**

பழங்காலத்தில் தமிழ்நாடு சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என்னும் முப்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இவற்றுள் பாண்டிநாடு என்று சொல்லப்பெற்ற பகுதி,

இன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கிய வட்டாரம் எனலாம். இந்தப் பாண்டியநாடே பழம்பெரும் நாடாகப்போற்றப்பட்டுள்ளது. இங்கு தான் தமிழ்மொழி பிறந்து வளர்ந்து சிறப்புற்றது என்பர். அதங்கோட்டாசான், தொல்காப்பியர், பனம்பாரனார், மாறோக்கத்து நப்பசலையார், காக்கைப்பாடினியார், நத்தத்தனார் நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், கவிராசப் பண்டிதர், எனத் தமிழ் வளர்த்த எண்ணற்ற புலவர்கள் வாழ்ந்த இடமும் இதுவே ஆகும். இதனைத் தென்பாண்டி நாடு, தென்தமிழ்நாடு, பொருநை நாடு எனப் பலவாறு புகழ்ந்துள்ளனர். இப்பாண்டியநாடு இரு பகுதிகளாகக் கருதப்பட்டது. ஒன்று வைகையாறு பாயும் மதுரை மாவட்டம் இதை நாம் வடபாண்டிநாடு என்று கூறுவதில்லை. ஆனால், தண்பொருநை ஆறு பாயும் தென்பகுதியை மட்டும் தென்பாண்டிநாடு என்று குறிப்பிடுகின்றோம். மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் என்றும் ”அருள் புரிவான் நாடு தென்பாண்டிநாடே தெளி” என்றும், “தில்லையுள் கூத்தனே! தென் பாண்டி நாட்டானே” என்றும், “குயிலே! தென் பாண்டி நாடனைக் கூறுவாய்” என்றும் தென்பாண்டி நாட்டையே சிறப்பித்துக் குறிப்பிட்டுள்ளார். இப்பாண்டிய நாட்டின் தென்பகுதியாகிய திருநெல்வேலி மாவட்டமே தென்பாண்டிநாடு என்று வழங்கப்பட்டது. இதனையே புலவர்கள் பொருநைநாடு என்று புகழ்ந்தனர்.

> **ஆப்கானியர் மதுரையை வென்றாலும், ராமநாதபுரம், தஞ்சாவூர் (ம) திருநெல்வேலியின் பகுதிகளைப் பாண்டியர் தொடர்ந்து வைத்திருந்தனர். விஜயநகர ராயர்கள் தெற்கு நோக்கி தம் அதிகாரத்தை விரிவுபடுத்தும் வரையும், பதினாறாம் நூற்றாண்டு இறுதிவரையில் அரசியல் களத்திலிருந்து மறைந்து போகும் வரையம்,பாண்டியர் திருநெல்வேலியின் சில பகுதிகளில் வரம்புக்குட்பட்ட செல்வாக்குச் செலுத்தினர் (தமிழ் நாட்டு வரலாறு, ப. 168)**

என கே.ராஜப்பன் அவர்கள் பாண்டியர்களின் ஆட்சிக்குட்பட்டு திருநெல்வேலி இருந்ததைக் குறிப்பிடுகின்றார். அந்நகரைச் சுற்றிலும் நெல் வயல்கள் வேலி போல அமைந்திருந்ததால் திருநெல்வேலி எனப்பெயர் பெற்றது. முற்காலத்தில் திருநெல்வேலிக்கு மூங்கில் காடு என்னும் பொருள் கொண்ட ‘வேணுவனம்’ என்னும் பெயரும் இருந்துள்ளது. காடுகள் திருத்தப்பட்டு கழனியான பிறகு நெல்லையம்பலம், சாலிவாடி, சாலிநகர், நெல்வேலி, என அப்பகுதிக்கு பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பர்.

திருநெல்வேலியின் கைலாசபுரத்தில் அமைந்துள்ள தைப்பூச மண்டபமும், திருப்புடை மருதூரில் உள்ள தைப்பூச மண்டபமும் புனிதமானதாகக் கருதப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிப்பது உழவுத்தொழில். தாமிரபரணி ஆற்றின் மூலம் இங்கு உழவுத்தொழில் நடைபெறுகின்றது. இங்குக் குளத்துப் பாசனமும் கிணற்றுப் பாசனமும் கூடப் பயன்பாட்டில் உள்ளன. இருபருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. மானாவாரிப் பயிர்களாகச் சிறுதானியங்கள், எண்ணெய் வித்துகள், காய்கனிகள், பருத்தி, பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன. **“தென்பாண்டி நாட்டுக்குப் பொருநையாறு உயிர்நாடியாகும்” (தமிழக வரலாறும் பண்பாடும், ப. 474)** என டாக்டர் மா இராசமாணிக்கனாரும் குறிப்பிடுகின்றார்.

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
**காடும் உடையது அரண் (குறள் - 742)**

என வள்ளுவரும் நீரின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றார்.

**உலக உயிர் அனைத்திற்கும் உயிர் வாழ்வத்றகான மூல ஆதாரமாக விளங்குவது நீர் ஆகும். உலகில் தோன்றிய முதல் உயிர் நீரிலிருந்து தோன்றியதாக அறிவியல் கூறுகின்றது. மக்களின் நல்வாழ்விற்கும், நல்வளத்திற்கும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கும் அடிப்படையாகத் திகழ்வது நீராகும். மனிதனுக்குத் தேவையான உணவு உற்பத்தியின் உயிர்ப் பொருளாகத் திகழ்வதும் நீராகும். (கோ. ஜெயசீலன், ப. 86)**

என முனைவர் மா.கார்த்திகேயன் அவர்கள், சூழலியல் நோக்கில் சங்கத் தமிழரின் நீர் மேலாண்மை என்ற கட்டுரையில் நீரின் பெருமையை எடுத்துரைக்கின்றார். அதன் சிறப்பை ஔவையாரும்,

**வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும்**
**நெல்லுயரக் குடியுயரும் குடியுயரக் கோலுயரும்**
**கோலுயரக் கோனு யர்வாள் (அமுதத் தமிழ் தந்த ஔவையார், ப. 244)**

என்று கூறுகின்றார். நில வளத்தின் அடிப்படையில் மக்களின் வாழ்வும், மக்களின் அடிப்படையில் அரசனின் உயர்வும் அமைவதற்கு நீர் முக்கிய காரணமாக இருப்பதை அறியமுடிகின்றது

**பொதிகை மலையும் இயற்கை அமைப்பும்**

குறிஞ்சி, முல்லை, மருதம்,நெய்தல், பாலை என்ற ஐவகை நில அமைப்பின் சிறப்பையும் இம்மாவட்டம் பெற்றுள்ளது. திருநெல்வேலியில் சிறப்புமிக்க பழமையான மலையாக பொதிகைமலை விளங்குகின்றது. இங்குள்ள பொதிகை மலை மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக அம்பை வட்டத்தில் பாபநாசம் அருகில் பரவிக் கிடக்கின்றது. இதன் ஒரு பகுதி கேரளநாட்டையும், மற்றொரு பகுதி திருநெல்வேலி மாவட்டத்தையும் தழுவிக்கிடப்பதாயினும் அதன் முழுப்பயனும் இம்மாவட்டத்திற்கே உரியதாக அமைகின்றது. திருக்குறுங்குடிக்கருகில் இம்மலை 1828.8 மீ. உயர்ந்து நிற்கின்றது. செம்மண் மலை என்றும், செம்மண் பொத்தை என்றும் இம்மலை அழைக்கப்படுகின்றது. இம்மலையில் அகத்தியர் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இம்மலையின் சில பகுதிகளில் காப்பி, தேயிலை, மிளகு, ஏலக்காய், சாதிக்காய், தேக்கு போன்றவை பயிரிடப்படுகிறது. குற்றாலமலை, கவிரமலை, திருமலை, கழுகுமலை, தோரணமலை, மொட்டைமலை, கோட்டைமலை, குளிராட்டிமலை, பஞ்சந்தாங்கிமலை போன்ற மலைகளும் இம்மாவட்டத்தில் உள்ளன. இங்கு உள்ள பொதிகை மலை உருவத்தில் சிறியதாயினும், தமிழர்கள் அதனை இமயமலைக்கு ஒப்பாகப் பெருமைப்படுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

**முத்தீ விளக்கின் துஞ்சும்**
**பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே (புறம்., பா. 2: 23-24)**

என இமயமலையோடு பொதிகைமலையை வைத்துப் போற்றும் பண்பைக் காணமுடிகின்றது. சந்தனமும், தென்றலும் வீசுகின்ற இம்மலையைப் பட்டினப்பாலை குடமலை என்று புகழ்கின்றது. குமரகுருபரர் இதனை,

**திங்கள்முடி சூடும்மலை தென்றல் விளையாடும்மலை**
**தங்கு புயல் குழுமலை தமிழ்முனிவன் வாழுமலை**
**அங்கயற்கண் அம்மை திருஅருள்சுரந்து பொழிவதெனப்**
**பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே (மதுரை மீனாட்சியம்மை குறம், பா. 12)**

என்றும்,

**சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்**
**சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடும் அங்(கு) ஒருபால்**
**வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்**
**விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்"**
**... தென்பொதிய மலை காண்மற்(று) எங்கள் மலை அம்மே (மதுரை மீனாட்சியம்மை குறம், பா. 14)**

என்றும் குறத்தி பொதிகைமலையின் வளத்தைப் பாடுவதாகக் குமரகுருபரர் பாடுகின்றார். இம்மலை பகைவனையும் நண்பனாய் மாற்றிவிடும் எனப் புகழ்கின்றார். பாண்டிய மன்னனைத் "தென்னம் பொருப்பன்" (புறம்., பா. 215: 6) எனப் புறம் பேசுகின்றது. தென்திசையில் உள்ள அழகிய பொதிகை மலைக்கு உரியவர் பாண்டியர் எனலாம்.

**இயற்கை வளங்கள் எப்போதும் வைப்புநிதி போல் கருதப்பட்டு அதில் வரும் விளைவுகள் வட்டியைப் போல் எடுத்துப் பயண்படுத்த வேண்டும் வைப்பு நிதி தலைமுறை தலைமுறையாகப் பாதுகாப்புடன் பின்வரும் எதிர்காலச் சந்ததிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். (தமிழ்நாடு நேற்று - இன்று - நாளை, ப. 381)**

என்று குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

**தாமிரபரணியின் பெயர்க்காரணமும் தோற்றமும்**

தாமிரம் என்றால் செம்பு. அதாவது தாமிரம் கலந்த பரணி நதி தாமிரபரணி நதியாயிற்று. பொதுவாக மனித உடலுக்குத் தாமிரசத்து என்பது நோய் தீர்க்கும் அரிய மருந்தாகக் கருதப்படுகின்றது.அவ்வகையில் ஆற்றின் கரையில் தாமிரசத்து நிறைந்து காணப்படுகிறது. ஆகவே தாமிரபரணியில் குளித்தால் பலநோய்கள் தீர்ந்துவிடும் அற்புதம் நடக்கின்றது என்பர். வால்மீகி இராமாயணத்திலும், வியாசர்பாரதத்திலும், காளிதாசரின் இரகுவம்சத்திலும், தாமிரபரணி பற்றி "தாம்பிரபரணி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பெயர் எல்லாம் மருவி தான் இப்போது தாமிரபரணி என்று அழைக்கப்படுகிறது. தாமிரபரணி ஆறு பாபநாசத்தில் இருந்து புல்வெளிகள் வழியாக கிழக்கு நோக்கிப் பாய்கிறது. கோதையாற்றின் கிளை நதிகளான கோதை மற்றும் மதுமலை ஆகிய இரண்டு ஓடைகள் சங்கமிக்கும் இடமே இந்த ஆற்றின் மூலாதாரமாகும். தாமிரபரணியின் நீர் செந்நிறத் தோற்றத்தில் காட்சியளிக்கும். அதற்கு அந்த ஆறுகளில் கரைந்து நிற்கும் செம்மண் துகள்களே காரணம் ஆகும். தாமிரபரணி பொருநை நாட்டிலேயே பிறந்து பொருநை நாட்டில் 2815 கிலோ மீட்டர் பரப்பை வளமாக்கி பொருநை நாட்டு

கடலிலேயே புன்னைக்காயலில் கலக்கிறது. எனவே இதனைத் தமிழ்நாட்டில் நைல் என்பர். பொருநையின் நீளம் 121 கி.மீ. தாமிரச்சத்து நிறைந்ததாலும் தன் பொருநை என்ற சொல்லின் திரிபாலும் இப்பெயர் பெற்றது என்பர். பொருநையுடன் கலக்கும் முதல் ஆறு மணிமுத்தாறு ஆகும்.

வற்றாத ஜீவநதிகளில் ஒன்றான தாமிரபரணியாற்றின் பிறப்பிடம், மேற்குத் தொடர்ச்சி மலையான முண்டந்துறை காட்டுப்பகுதியில் உள்ள பூங்குளம் என்ற இடம் ஆகும். கடல் அடர்ந்த காட்டுப் பகுதியான முண்டந்துறையில் பல ஆயிரம் ஆண்டுகளாக படிந்து இருக்கும் செடி, கொடிகளின் எச்சங்களும், மண்ணும் பஞ்சு மெத்தை போன்ற அமைப்பைப் பெற்று இருப்பதால், தென் மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் அங்கு பெய்யும் மழை நீர் முழுவதையும் அந்த இடம் அப்படியே உள்வாங்கிக் கொண்டு, மழை அல்லாத காலங்களில் சிறுகச் சிறுக வெளிவிடும் போது அது, தாமிரபரணி ஆறாக உருவாகி, ஆண்டு முழுவதும் வற்றாமல் ஓடி வருகிறது. தாமிரபரணி நதி ஆனது திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் வழியே பாய்ந்து இறுதியில் வங்கக் கடலில் கலக்கிறது. தாமிரபரணி நதி வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் உற்பத்தி ஆனதாகக் கூறப்படுகிறது. இலங்கைத்தீவிற்கு 'தாப்ரபன்னெ' என்றும் 'தாம்பபன்னி' என்றும் பெயர்கள் இருந்திருக்கிறது. மலைத்தோட்டங்களில் வேலை செய்யவேண்டி வந்து குடியேறிய மக்கள் இந்நதிக்கு தீவுப்பெயரால் 'தாம்பபன்னி' என்று அழைத்தார்கள். அதுவே இப்பொழுது தாமிரபரணி என்று அழைக்கப்படுகிறது. என இந்த நதியைப் பற்றி பல சுவாரஸ்யமானகதைகள் உண்டு. ஆண்டு முழுவதும் வற்றாமல் பாயும் இந்த ஆற்றின் நீர் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. பாரதியார்,

**காவிரி தென்பெண்ணை பாலாறு தமிழ்**
**கண்டதோர் வையை பொருநை நதி என**
**மேவியயாறு பல வோடத் திரு**
**மேனி செழித்த தமிழ்நாடு (பாரதியார் கவிதைகள், ப. 152)**


எனத் தாமிபரணியைப் பொருநை நதியாகப் பெயரிட்டு அழைக்கின்றார். இராமாயணத்தில் சீதையைத் தேட சுக்கிரீவன் வானரப்படைகளைத் தெற்கு நோக்கி அனுப்புகின்றான். அப்போது இராமன் அனுமனை நோக்கி நீ எந்த வேலைக்கு அனுப்பப்படுகிறாய் என்பதை நன்கு உணர்வாயாக. நீ செல்லும் வழியில் பொருநை ஆறு தோன்றும். அப்பொதிகைமலைப் பக்கம் செல்லாதே. அங்கே போனால் அகத்தியர் நடத்தும் தமிழ்ச்சங்கம் உள்ளது. அதனைக் கண்டால் மனதைப் பறி கொடுக்க நேரிடும். ஆதலின் அம்மலைக்கு இடப்பக்கமாகப் பொருநை என்னும் ஆறு பாயும் இடத்தைக் கடந்து மகேந்திர மலைப்பக்கமாகச் செல்லுவாயாக என்று உரைக்கின்ற போது இங்கு கம்பரின் தமிழ்ப்பற்று வெளிப்படுகின்றது. இதனை,

**தென்தமிழ்நாட்டு அகன் பொதியில் திருமுனிவன்**
**தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்**
**என்றும் அவன் உறைவிடம் ஆம் ஆதலால்**
**அம்மலையை இடத்திட்டு ஏகிப்**
**பொன்திணிந்த புனல் பெருகும் பொருநை எனும்**

மலர் - 5, இதழ் - 2, வைகாசி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

**திருநதிபின் பொழிய நாகக்**
**கன்ற வளர் தடஞ்சாரல் மகேந்திரமா**
**நெடுவரையும் கடலும் காண்பீர் (கம்ப. கிட்கிந்தா. நாடவிட்டபடலம், 31)**

என்ற வரிகள் விளக்குகின்றன.




படம் 1: பொருநை நதி தோற்றம் மற்றும் முடிபு

**தாயாக வீரமுழக்கம் இடல்**

நீர் இன்றி அமையாயது இவ்வுலகு… தாயையும் தண்ணீரையும் பழிக்கக்கூடாது… என்பார்கள். தாய்மைக்கு ஈடு இணை எதுவுமில்லை; நீரும் அத்தகையதே. அறத்தை வழியுறுத்துவதும், வீரத்தை விதைப்பதும் ஒரு தாயின் கடமை. அத்தாயினைப்போல் தாமிரபரணி ஆறு விளங்குகின்றது. என் நீரைக் குடித்து வளருங்கள். ஒப்பில்லா வீரர்களாகி சுதந்திரத்தின் முத்திரையைப் பதியவையுங்கள். அயலான் ஒருவன் என்னைத் தீண்டுவானாகில் உங்கள் உயிரைக் கொடுத்தேனும் என்னைக் காப்பாற்றுங்கள் என வாழ்த்தி வீரமுழக்கம் இடுவதை,

**அலை யெறிந்தீதோ ஆர்த்தனள் கேண்மின்!**
**முரைவசுரந் தூட்டிய முதுநதிமாதா! தாம்பிர பன்னிக்கு ஜே ! ஜே!**
**… பொதியா மலையிற் புறப்பட்டிங்குதன்**
**படியே உலாவுமிச் சிறுகால் (மனோன்மணீயம். அங்கம், 4, ப. 190)**

என பெ.சுந்தரம்பிள்ளை தமது நூலில் பதிவிடுகின்றார். புறநானூறும் பொருநை என்றே அழைக்கின்றது.

**வரிமணற் புனை பாவைக்குக்**
**குலவுச்சினைப் பூக்கொய்து**

**தண்பொருநைப் புனல்பாயும்... (புறநானூறு, பா. 11: 3-5)**

என எடுத்தியம்புகின்றது.

> **சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகையில் நீர் மேலாண்மை பற்றி மக்கள் தெளிவான அறிவு பெற்றிருந்தனர் என்பதை அறியமுடிகிறது இயற்கை முறையில் இயற்கையைச் சார்ந்தே வாழ்ந்தனர். மக்கள்தொகை குறைவாக இருந்ததோடு தொழிற்சாலைகளும் அதிகமில்லாததால் மாசுபாடு குறைவாக இருந்ததால், மக்கள் ஆரோக்கியத்துடனும் மகிழ்வுடன், இயற்கையைத் தகுந்த முறையில் பயன்படுத்தி மனநிறைவுடன் வாழ்ந்தனர். இப்பகுதியில் சங்ககால மக்கள் ஐவகை நிலங்களில் நீரினை மழை, அருவி, சுனை, காட்டாறு, ஆறு, பொய்கை, குளம், கிணறு போன்ற நிலைகளில் நீரைச் சேமித்து வைத்து வாழ்ந்துள்ளனர். (எட்டுத்தொகை நூல்களில் நீர் குறித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, ப. 13)**

என ரெஜினா அவர்கள் அக்கால மக்களின் நீர் சேமிப்பு முறையினை எடுத்துரைக்கின்றார். இன்று குடிநீரைக் கூடப் புட்டியில் அடைத்து விற்கும் நிலை ஏற்பட்டுள்ளதைப் பார்க்க முடிகின்றது.

**வைணவ, சைவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு**

தமிழர்கள் கட்டிடக்கலையில் சிறப்புற்று இருந்தார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. அதற்கு உதாரணமாக தாமிரபரணி நதியில் கட்டப்பட்ட படித்துறைகளையும், மண்டபங்களையும் எடுத்துக்காட்டலாம். தாமிரபரணி ஓடும் கரையெல்லாம் நூற்றுக்கணக்கான மண்டபங்கள் சிறியதும், பெரியதுமாக காட்சியளிக்கின்றன. திருநெல்வேலியைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு சில புத்தகங்கள் உள்ளன.

> **இம்மண்ணின் வரலாற்றை ஸ்டூவர்ட் (1876), கால்டுவெல் (1881), பேட் (1917) ஆகியோர் எழுதிய வரலாற்று நூல்கள் மட்டுமல்லாமல், எட்டயபுரம் குருகுகதாச பிள்ளை(1936) எழுதிய '*திருநெல்வேலிச் சீமை சரித்திரம்*', கணபதியா பிள்ளையின் Ettayapuram past and present, அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் பேராசிரியர் ச. கணபதி ராமனின் 'பொருநை நாடு', சோலெயின் 'திருநெல்வேலி மாவட்டம்' போன்ற பல வரலாற்று நூல்கள் வெளிவந்துள்ளன. (நிமிர வைக்கும் நெல்லை, ப. 32)**

என்று என்கே.எஸ்.இராதாகிருஷ்ணன் கூறுகின்றார் .இதனைச. இளங்கோமணி, திருநெல்வேலியின் தோற்றமும் அதன் பரிமாணமும் என்ற தமது கட்டுரையில் பதிவிடுகின்றார். இவை மட்டுமின்றி அப்பணசாமி, முத்தாலங்குறிச்சி காமராஜ் ஆகியோர்களும் திருநெல்வேலி பற்றி எழுதியுள்ளனர். பூலோக வைகுண்டம் எனப்படும் ஸ்ரீரங்கம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறதோ, அதே முக்கியத்துவத்துடன், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, தென் திருப்பேரை, தொலைவில்லிமங்களம், திருக்குளந்தை, திருப்புளியங்குடி, திருக்கோளூர், வரகுணமங்கை. அரவிந்தலோசன் ஆகிய தலங்கள் நவதிருப்பதி என்று அழைக்கப்படுகின்றன. நவ கைலாயக் கோவில்களும், நவதிருப்பதி கோவில்களும் தாமிரபரணி கரை ஓரமாகத்தான் அமைந்திருக்கின்றன. வைணவ, சைவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக தாமிரபரணி விளங்குகிறது என்று

சொன்னால், அது மிகையாகாது. திருநெல்வேலியிலுள்ள நெல்லையப்பர் கோவிலானது தமிழகத்திலேயே மிகப்பெரிய சிவாலயம் ஆகும். இது, பாண்டிய மன்னர்களால் கி.பி.700ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. நெல்லையப்பர் கோவிலில் சுவாமிக்கு தனி ராஜகோபுரமும், அம்பாளுக்கு தனி ராஜகோபுரமும் உண்டு. பொதுவாக கோவில்களில் சுவாமி, அம்பாள் இருவருக்கும் ஒரே ஆகமப்படிதான் பூஜை நடக்கும். ஆனால், இங்கு காந்திமதி அம்பாள் தனிக்கோவிலில் இருப்பதால் காரண ஆகமப்படியும், நெல்லையப்பருக்கு காமிக ஆகமப்படியும் ஆறு கால பூஜை நடக்கிறது. நெல்லையப்பரும் காந்திமதியும், தாமிரபரணிக்கு நீராடச் செல்லும் வைபவமும் உண்டு. ஐந்து சபைகளில், நெல்லை தாமிர சபை. தாமிர சபை பக்கத்தில் தாமிரபரணி தேவிக்கு சிலையும் உள்ளது. மகாத்மியம் 'இந்தப் புண்ணிய நதி, வைகாசி விசாக நாளில் உற்பத்தியானது' எனக் கூறுகின்றது.

**துணை ஆறுகளும் அணைக்கட்டுகளும்**

தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளாக காரையாறு, சேர்வலாறு, மணி முத்தாறு, கடனா நதி, பச்சையாறு, சிற்றாறு மற்றும் இராம நதி முதலியன அமைகின்றன. தாமிரபரணி ஆற்றில் உள்ள முக்கியமான அணைக்கட்டுகளாக காரையார் அணை (மேலணை), பாபநாசம் அணை (கீழணை) சேர்வலாறு அணை, மணிமுத்தாறு அணை, கோடைமேலழகியான் அணை (தலையணை), நதியுண்ணி அணைக்கட்டு, கன்னடியன் அணைக்கட்டு, அரியநாயகிபுரம் அணைக்கட்டு, பழவூர் அணைக்கட்டு, சுத்தமல்லி அணைக்கட்டு, மருதூர் அணைக்கட்டு, திருவைகுண்டம் அணைக்கட்டு போன்ற அணைக்கட்டுகளில் இருந்து கால்வாய்கள் மூலம் தண்ணீரானது பாசனத்திற்குப் பிரித்து அனுப்பப்படுகிறது. இந்தத் தண்ணீர் தான் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தைத் தமிழகத்தின் இரண்டாவது நெற்களஞ்சியமாக மாற்றுகிறது.

> **சுற்றுச்சூழலில் முக்கியமான காரணியாக அமைவது நீர். அதாவது குளம், குட்டை ஏரிகள், ஆறுகள், கடல்கள் என அனைத்தினுடைய தன்மையும், தரமும் காக்கப்பட வேண்டும். மாந்தன் பயன்பாட்டிற்கு மிகக் குறைந்த அதாவது ஒரு விழுக்காடு தண்ணீர் உலகில் உள்ளது. அதைப் பேண வேண்டியது மிகவும் இன்றியமையாதது. (சூழலியல் நோக்கில் புறநானூறு, ப. 298)**

என கோ. பெரியசாமி அவர்கள் நீரின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றார்.

**ஆற்று வெள்ளம்**

பொருநை நதி எனப்படும் தாமிரபரணியில் பெருகிய வெள்ளம் கடலை எதிர்த்துச் சென்று அதன் வயிற்றை கிழித்துக் கொண்டு உள்ளே புகுந்து ஒலியெழக் கடலில் கலந்து கிழக்கே சூர்ய உதயத்திற்கும், மேற்கே பொதிகை மலைக்கும் சமமாகப் பெருக்கெடுத்து ஓடும். அந்நீரின் வேகத்தால் அச்சம் கொண்டு துதிக்கை மூக்கன் என்னும் மீன், பண்ணைச் சாலைமீன், எண்ணெய் மீன், பசலிமீன், கசலி மீன், பழம்பாசி மீன், மகரமீன், சள்ளை மீன் , மத்திமீன், உல்லம் மீன், பொத்திமீன், மடந்தைமீன், கடந்தை மீன், சம்பான் மீன், நொறுக்கி மீன், பஞ்சலை மீன், கருங்கண்ணி மீன் ஆகிய மீன்கள் பெருகி வரும் நீரின் வேகத்தால் மணலுக்குள் புதைந்தும், கரையில் ஒதுக்கியும், கடலை நோக்கிப்

பாய்கின்ற அழகரான திருமாலின் கருணை வெள்ளமாய் நிற்கின்ற தாமிரபரணியின் புதுமையை,

**உதைத்து விசை கொண்டெதிர்த்துக் கடலின்**
**உதரங் கீறி யதிரும் நீர்**
**… பொருநை யாறு பெருகி வாற**
**புதுமை பாரும் பள்ளீரே (முக்கூடற்பள்ளு, பா. 50)**

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. பலவகையான மீன்களின் பெயர்களைப் பற்றிய குறிப்பையும் அறிந்து கொள்ள முடிகின்றது. **"உலகில் உயிர்கள் வாழக் காரணமாக விளங்குவது நீர். ஒழுக்கம் நிலை பெற்றிருக்கவும் தண்ணீரே காரணம் அடுத்த உலகப் போர் தண்ணீருக்காக இருக்கலாம்." (வள்ளுவர் கண்ட உலகம், ப. 124)** என்ற செய்தியை நோக்கும்போது தண்ணீரின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடிகின்றது. கடவுளுக்கு கடவுளாக விளங்கும் தண்ணீரின் நிலையை,

**தண்ணீருக்கு நிறமில்லை என்கிறது அறிவியல், வானத்திற்கு நிறத்தைத் தருகிறது தண்ணீர். நீருக்கு வடிவம் இல்லை. மண்ணிற்கு வடிவத்தைத் தருகிறது. கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற சந்தேகத்திற்கு இன்று வரையிலும் முடிவில்லை. கடவுள் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்பது மக்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது. அந்தத் தூணிற்குள்ளும் துரும்பிற்குள்ளும் நுளைந்து தங்குவதால் தண்ணீர் கடவுளின் கடவுளாகக் காட்சிதருகிறது. (பா. ஈஸ்வரன், ப. 868)**

முனைவர் பா.ஈஸ்வரன் தண்ணீரின் சிறப்பை மொழிகின்றார்.

**தாமிரபரணி ஆற்றங்கரைப் போர்**

பண்டைத் தமிழர் ஆற்று நீர் பாயும் நிலப் பரப்பைப் பண்படுத்திப் பயிர் செய்து மருத நிலமாக்கினார்கள். ஒரு தாய் தன் பிள்ளையை வளர்ப்பது போல் மருத நிலத்தை நீரூட்டி வளர்ப்பது நதியென்று அதனைக் கொண்டாடினார்கள். காவிரியாற்றைப் பொன்னியாரென்று புகழ்ந்தார்கள். வைகையாற்றைப் "பொய்யாக் குலக்கொடி "என்று போற்றினார்கள். சுருங்கச் சொல்லின் நதியே நாட்டின் உயிர் என்பது தமிழர் கொள்கை. ஆற்றங் கரைகளிலே சிறந்த ஊர்கள் அமைந்தன. 'ஆறில்லா ஊருக்கு அழகில்லை' என்ற பழமொழியும் எழுந்தது. முற்காலத்தில் சிறந்து விளங்கிய நகரங்களும், துறைமுகங்களும் ஆற்றையடுத்தே உண்டாயின.

**உறையூர் என்பது சோழநாட்டின் பழைய தலைநகரம். அது காவிரிக் கரையில் அமைந்திருந்தது. பட்டினம் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற சோழநாட்டுத் துறைமுகம் காவிரியாறு கடலில் புகுமிடத்தில் வீற்றிருந்தது. அக் காரணத்தால் புகார் என்றும், காவிரிப்பூம்பட்டினம் என்றும் அந் நகரம் பெயர் பெறுவ தாயிற்று. அவ்வாறே பாண்டி நாட்டுப் பெரு நதியாகிய வைகையின் கரையில் மதுரை என்னும் திருநகரம் அமைந்தது. பாண்டியர்க்குரிய மற்றொரு சிறந்த நதியாகிய பொருநையாறு கடலோடு கலக்குமிடத்தில் கொற்கை என்னும் துறைமுகம் சிறந்து விளங்கிற்று. (தமிழகம் ஊரும் பேரும், ப. 15)**

என ரா. பி.சேதுப்பிள்ளை கூறுவது ஆற்றின் பெருமையை உணர்த்துகின்றது. ஒரு சமயம் திருவிதாங்கூர் மன்னர் தனக்கு செலுத்த வேண்டிய திறையை கட்ட மறுக்கவே, பேரரசர் அச்சுதராயர் படையெடுத்து வந்து திருவரங்கத்தில் முகாமிட்டிருக்க அச்செய்தியைக் கேள்விப்பட்ட விசுவநாதர் பேரரசுப் படைக்குத் துணையாகத் தம்முடைய படையையும் அனுப்பி வைத்தார். 1532இல் தாமிரபரணி ஆற்றின் கரையில் நடைபெற்ற போரில், திருவிதாங்கூர் மன்னனையும், அவனுக்குத் துணையாக வந்த கிளர்ச்சியாளன் சாளுவ வீரநரசிம்மனையும் பேரரசுப்படைகள் தோற்கடித்தன. திருவிதாங்கூர் மன்னன் திறை செலுத்த ஒப்புக்கொண்டதால் மன்னிக்கப்பட்டான். இவ்விடம் தாமிரபரணி பாயும் இடம் ஆகும்.

> **பேரரசர் தனக்கு உதவியதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தென்காசிப் பாண்டியன், தன் மகளை அவருக்கு மணமுடித்துக் கொடுத்தான். விசுவநாதர் திருநெல்வேலி நகரத்தை விரிவாக்கி, அதன் பாதுகாப்பைப் பலப்படுத்தினார். (தமிழக வரலாறும் பண்பாடும், ப. 224)**

என்பதை முனைவர் ந.அறிவுராஜ் குறிப்பிடுகின்றார். பண்டைத் தமிழர்கள் ஆறுகள் கூடுந் துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதிப் கொண்டாடினார்கள். அவற்றைக் கூடல் என்று அழைத்தார்கள். தொண்டை நாட்டில் பாலாறும், சேயாறும், கம்பையாறும் சேருகின்ற இடத்தில் அமைந்த ஊர் திருமுக்கூடல் என்று கூடல் பெயர் பெற்றது. அது போல நெல்லை நாட்டில் தாமிரபரணியும், சித்திரா நதியும், கோதண்டராம நதி என்னும் கயத்தாறும் ஒன்றுசேர்கின்ற இடம் முக்கூடல் என முற்காலத்தில் சிறந்திருக்கிறது.

**முடிவுரை**

தமிழகத்தின் சிறப்புப்பெற்ற ஆறுகளில் தனிச்சிறப்பாகவும், தனித்த அடையாளமாகவும் தாமிரபரணி ஆறு விளங்குகின்றது. தமிழ் வளர்த்த பொதிகைமலைச் சாரலை உடையதாய் வீறு பெறுகின்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க பல தடயங்கள் கிடைக்கின்ற பொக்கிஷ பூமியாக உள்ளது. தனது தடம் மாறாது நீண்டு பயணிக்கின்ற பெருமை இப்பொருநை நதிக்கு மட்டுமே உண்டு என்பதை இக்கட்டுரை தெளிவுபட விளக்கி நிற்கின்றது.

**குறிப்புகள்**

[1] அருள்ராஜ், ந., தொகு. *தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்.* பாவை பிரிண்டர்ஸ், 2010.
[2] இளங்குமரன், இரா., தொகு. *மதுரைமீனாட்சியம்மை குறம்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1977.
[3] இளங்கோமணி, ச. "திருநெல்வேலியின் தோற்றமும் அதன் பரிமாணமும்." *கீற்று*, நவம்பர் 2021.
[4] இராசமாணிக்கனார், மா. *தமிழக வரலாறும் பண்பாடும்.* சாரதா பதிப்பகம், 2011.
[5] இராதாகிருஷ்ணன், கே.எஸ். *நிமிர வைக்கும் நெல்லை, பொதிகை, பொருநை.* பரிசல் அறக்கட்டளை, 2005.
[6] இராமசுப்ரமணியம், வ.த., தொகு. *கம்பராமாயணம்.* திருமகள் நிலையம், 2005.
[7] ஈஸ்வரன், பா. "கவிஞர் வைரமுத்து நீர் கவிதையில் சுற்றுச்சூழல் சிந்தனைகள்." *களஞ்சியம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்*, இதழ் 4, பிப்ரவரி 2026.

[8] கார்த்திகேயன், மா. "சூழலியல் நோக்கில் சங்கத் தமிழரின் நீர் மேலாண்மை." *அரிமா நோக்கு*, ஜனவரி 2025.
[9] சேதுப்பிள்ளை, ரா.பி. *தமிழகம் ஊரும் பேரும்*. பழனியப்பா பிரதர்ஸ், 1946.
[10] துரைசாமிப்பிள்ளை, த. *அமுதத் தமிழ் தந்த ஔவையார்*. உமா பதிப்பகம், 2003.
[11] பக்தவச்சலம் வேணுகோபால், தொகு. *பாரதியார் கவிதைகள்*. லியோபுக் பப்ளிஷர்ஸ், 2004.
[12] பாலசுப்பிரமணியன், கு.வெ., தொகு. *புறநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
[13] புலியூர்கேசிகன், தொகு. *முக்கூடற்பள்ளு*. பாரி நிலையம், 1960.
[14] பெரியசாமி, கோ. "சூழலியல் நோக்கில் புறநானூறு." *புதுப்புனல்*, மலர் 14, இதழ் 6, சூன் 2023.
[15] முருகானந்தம், ந. "தமிழ்நாடு நேற்று –இன்று- நாளை." *தமிழ்த்துறை*, பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், 1997.
[16] ராஜப்பன், தொகு. *தமிழ் நாட்டு வரலாறு*. எதிர்வெளியீடு, 2015.
[17] ரெஜினா. "எட்டுத்தொகை நூல்களில் நீர் குறித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு." *சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 2, இதழ் 1, 2020.
[18] வரதராசனார், மு., தொகு. *திருக்குறள்*. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1959.
[19] வேங்கடசாமி, மயிலை சீனி, பதிப்பாசிரியர். *மனோன்மணீயம்*. கௌரா பதிப்பகம், 2009.
[20] ஜெயசீலன் கோ. "வள்ளுவர் கண்ட உலகம்." *அரிமா நோக்கு*, ஜுலை 2019, இராஜா பதிப்பகம்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.